(இ) செவித்திறன் மாற்றுத் திறனாளிகள், சைகை மொழியில் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பு ஒளிப்பதிவை வெளியிடுதல்-தொடக்க விழா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்ட விதிகளின்படி செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மின்னணு ஊடக நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ளும் வகையில், சைகை மொழியில் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பு, ஒளிப்பதிவு செய்யப்பட்டு* YouTube *மூலமாக ஊடகங்களில் ஒளிபரப்பு செய்வதற்கு ஏற்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் தொடக்க நிகழ்வினை வருகிற 17–4–2023 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9–45 மணிக்கு பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைப்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்து, சிறப்பிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள்இ த்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 17–4–2023 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

89. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை மற்றும் 2021–2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)] (தமிழ்–ஆங்கிலம்)

90. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்து இரண்டாவது

ஆண்டறிக்கை. 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [(மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)]. (தமிழ்–ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

190. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

191. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (சிறுபான்மையினர் நலன்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

192. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறை திட்டம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

193. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

194. மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

195. பட்டுவளர்ச்சித் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

196. மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 13]

197. மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

198. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

199. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

200. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

201. 'மிளிரும் மின்சாரத் துறை–சாதனைகள்' என்கிற சிறுநூல். (தமிழ்)

202. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

203. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

204. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

[2023 ஏப்ரல் 13



வ. எண்.	பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள மாவட்டங்கள்
1.	செங்கல்பட்டு மாவட்டம் – (2)
2.	
3.	தஞ்சாவூர் மாவட்டம்.
4.	வேலூர் மாவட்டம்.
5.	சேலம் மாவட்டம்.
6.	கோயம்புத்தூர் மாவட்டம்.
7.	திருநெல்வேலி மாவட்டம்.
8.	விருதுநகர் மாவட்டம்.
9.	கோயம்புத்தூர் மாவட்டம்.
10.	கடலூர் மாவட்டம்.

	நிறுவப்பட உள்ளவை
11.	திருப்பூர் மாவட்டம்
12.	திருவள்ளூர் மாவட்டம்
13.	கிருஷ்ணகிரி மாவட்டம்

6.1.2. கோவிட்-19 மருத்துவக் கழிவு மேலாண்மை

மருத்துவமனைகள், தனிமைப்படுத்தப்பட்ட முகாம்கள், வீடுகள் / வீட்டு பராமரிப்பு வசதிகள், ஆய்வகங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் உருவாகும் கோவிட்—19 பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மருத்துவக் கழிவுகள் ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நெறிமுறைகளின்படி, இயக்கத்திலுள்ள 10 பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிறுவனங்களால் முறையாக சேகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன.

ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனைத்து பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களையும், கூடுதலாக உருவாகும் கோவிட்–19 மருத்துவ கழிவுகளை கையாள்வதற்காக அதிக நேரம் செயல்பட அறிவுறுத்தியுள்ளது.

மேலும், ஒன்றிய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி, கோவிட்–19 மருத்துவ கழிவுகளை எரிப்பதற்கு கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை அமைப்பிலுள்ள எரிப்பானை பயன்படுத்துவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.